வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண். 6794 / இ2/2019 நாள் .09.2019

---

பொருள் : குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009 – தனியார் சுயநிதிப் பள்ளிகளில் 25% இடஒதுக்கீட்டின் கீழ் இதுவரை சேர்க்கை செய்யப்பட்ட குழந்தைகளின் விவரங்கள் – பதிவு செய்தல் – அறிவுரை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை : 1. தமிழ்நாடு மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநர் மற்றும் குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்ட மாநில முதன்மைத் தொடர்பு அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.843/இ1/2019 நாள். 10.09.2019

---

பார்வை 1ல் காணும் தமிழ்நாடு மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரின் செயல்முறைகளுக்கிணங்க வேலூர் மாவட்டம், குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009 பிரிவு 12 (1) (சி)ன்படி அனைத்து சிறுபான்மையற்ற தனியார் சுயநிதிப் பள்ளிகளில் 25% இடஒதுக்கீட்டின் கீழ் 2013–2014ம் ஆண்டு முதல் 2019–20ம் ஆண்டுவரை சேர்க்கை செய்யப்பட்ட குழந்தைகளின் விவரங்கள் கல்வி தகவல் மேலாண்மை இணைய தளத்தில் (EMIS) பதிவேற்றம் செய்யப்பட வேண்டும் மேலும் சேர்க்கை செய்யப்பட்ட குழந்தை இடையில் நின்றிருந்தால் அதன் விவரமும் பதிவு செய்ய தெரிவிக்கப்பட்டது மேலும் 17.09.2019 மற்றும் 18.09.2019 ஆகிய இரண்டு நாட்களில் கல்வி மாவட்ட அளவில் கீழ்கண்ட இடங்களில் சரிபார்ப்பு கூட்டம் நடைபெறுகிறது. 25% சேர்க்கை வழங்கிய மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகள் / மெட்ரிகுலேசன் பள்ளிகளின் முதல்வர்கள் மற்றும் இப்பொருள் சார்ந்த விவரங்களை பள்ளி அளவில் கவனிக்கும் பணியாளர் லேப்டப் மற்றும் மேற்காண் திட்டத்தின் கீழ் சேர்க்கை சார்பான அனைத்து ஆவணங்களுடன் கூட்டத்திற்கு வருகை தர வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

| கல்வி மாவட்டம் | கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|
| வேலூர் | கூனா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி. |
| இராணிப்பேட்டை | அரசு மேல்நிலைப் பள்ளி, இராணிப்பேட்டை. |
| அரக்கோணம் | அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, அரக்கோணம். |
| வாணியம்பாடி | ஆதார்ஷ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, கோட்டை வாணியம்பாடி. |
| திருப்பத்தூர் | ஹோலிக்கிராஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, திருப்பத்தூர். |

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

16.09.2019

பெறுநர்
மெட்ரிக்/ நர்சரி மற்றும் தொடக்கப்பள்ளி
முதல்வர்கள்/தாளாளர்கள், வேலூர் மாவட்டம்.

நகல்
1. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்
வேலூர் மாவட்டம்(தொடர் நடவடிக்கைக்காக)
2. தமிழ்நாடு மெட்ரிகலேசன் பள்ளிகள் இயக்குநர்
சென்னை–06 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

அ.சு